பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 11 2025 12 40

ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ரஷ்யா-யுக்ரைன் போருக்கு தீர்வு காண இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
- ஜி-20 நாடுகளின் கூட்டமைப்பில் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானது என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- ஏற்றுமதி மேம்பாட்டு திட்டத்திற்கான நெறிமுறைகள் விரைவில் செயல்படுத்தப்படும் என்று வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியஷ்கோயல் அறிவித்துள்ளார்.
- தெற்கு அந்தமான் கடற்பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- ஆஸ்திரேலியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் சாம்பியன் பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ரஷ்யா-யுக்ரைன் போருக்கு தீர்வு காண இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள பதிவில், யுக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Andrii Sybiha-வுடன் இது தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

யுக்ரைனில் அமைதியை நிலைநாட்ட இந்தியா தொடர்ந்து ஆதரவு தெரிவிக்கும் என்று திரு. ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

ரஷ்யாவுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா முன்வைத்த திட்டத்தை யுக்ரைன், வரும் 27ஆம் தேதிக்குள் ஏற்றுக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமெரிக்காவின் அமைதித் திட்டம் இறுதியானதல்ல என்றும், இதில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் என்று தெரிவித்தார்.

யுக்ரைன் நாடு மிக கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டு வருவதாக அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

இதனிடையே அமெரிக்கா கொண்டு வந்த திட்டத்தின் அடிப்படையில் யுக்ரைனுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டுவர தயாராக இருப்பதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்ஸ், ஜெர்மனி மற்றும் யுக்ரைன் நாட்டு பாதுகாப்பு அலுவலர்கள் ஜெனிவாவில் அமைதி திட்டம் குறித்த ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.

<<<<>>>>

ஜி-20 நாடுகளின் கூட்டமைப்பில் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானது என்று வெளியுறவுத்துறை செயலர் திரு. சுதாகர் தலேலா தெரிவித்துள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்கில் ஜி-20 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிலையான வளர்ச்சி, சமத்துவம் உள்ளிட்ட கருப்பொருளின் அடிப்படையில் இந்த உச்சிமாநாடு நடைபெறுவதாக தெரிவித்தார்.

பேரிடர் மேலாண்மை, பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு கடனுதவி வழங்குவது, பொருளாதார வளர்ச்சிக்கு கனிம வளங்களை பயன்படுத்துவது உள்ளிட்டவைக்கு இந்த உச்சிமாநாட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஜி-20 அமைப்பின் தலைவராக இந்தியா பதவி வகித்தபோது உருவாக்கப்பட்ட பல்வேறு கொள்கைகள் தற்போது தென்னாப்பிரிக்கா தலைமையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த நாடுகள் பருவநிலை மாற்றம் தொடர்பான திட்டங்களை செயல்படுத்த நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்த உச்சிமாநாட்டில் வலியுறுத்தியதை அவர் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

ஏற்றுமதி மேம்பாட்டு திட்டத்திற்கான நெறிமுறைகள் விரைவில் செயல்படுத்தப்படும் என்று வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

ஜெருசலேமில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 25 ஆயிரத்து 60 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு கடந்த 12ஆம் தேதி அனுமதி அளித்திருந்ததாக கூறினார்.

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பை எதிர்கொள்ள இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு இந்த திட்டம் அறிவிக்கப்பட்டிருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய வரி விதிப்பால் பாதிக்கப்பட்ட ஜவுளித்துறை, தோல்பொருட்கள், நகைகள், பொறியியல் உபகரணங்கள் உள்ளிட்ட துறைகளை மீட்க இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்திய சரக்குகளுக்கு அமெரிக்கா 50 சதவீதம் கூடுதல் வரி விதித்ததையடுத்து, ஏற்றுமதியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால்,

மத்திய அரசு ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தை கொண்டுவந்துள்ளதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாகாலாந்து - திமாபூர் விமான நிலையத்தில் இருந்து ஏர்-இந்தியா எக்ஸ்பிரஸ் விமான சேவையை அம்மாநில முதலமைச்சர் திரு. Neiphiu Rio தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் பேசிய அவர், நாகாலாந்தில் Hornbill திருவிழா நடைபெறுவதால், அம்மாநிலத்திற்கு கூடுதல் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு இந்த விமான சேவை பயனுள்ளதாக அமையும் என்று கூறினார்.

திமாபூர் செல்லும் ஏர்-இந்தியா எக்ஸ்பிரஸ் விமான கட்டணங்களுக்கு 15 சதவீத தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சிக்கிம் மாநிலத்தில் Sevok-Rongo இடையிலான ரயில் பாதை அமைக்கும் பணிகள் 85 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக வடகிழக்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

காங்டாக்கில் ஆகாஷ்வாணி செய்திப்பிரிவு ஏற்பாடு செய்திருந்த நிகழச்சியில் கலந்துகொண்டு பேசிய வடகிழக்கு ரயில்வே அதிகாரி, பல்வேறு சுற்றுச்சூழல் மற்றும் புவிசார் சவால்களை எதிர்கொண்டு இந்தப் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

<<<<>>>>

ஆன்மிக தலைவரும், மிகச்சிறந்த சமூக சேவகருமான புட்டபர்த்தி ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் பிறந்த தினமான இன்று அவரின் நினைவுகளை போற்றி வணங்குவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஸ்ரீசத்ய சாய் பாபா அறக்கட்டளை ஏரமாளமான கல்விப் பணிகளையும், சமூக சேவைகளையும் செய்து வருவதாக கூறினார்.

புட்டபர்த்தியில் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் நூற்றாண்டு விழாவில் இன்று உரையாற்றிய தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி, ஆன்மிகத்தை மனித சேவையுடன் இணைத்து ஏழைகளின் நலனுக்காக உதவியவர் ஸ்ரீ சத்ய சாய் பாபா என்று தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மலாக்கா ஜலசந்தி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடற்பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்று அதே பகுதியில் நிலவுவதாக வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

நாளை தொடங்கி அதற்கடுத்த 48 மணி நேரத்திற்குள் தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் புயலாக வலுவடையக்கூடும் என்று அவர் கூறினார்.

அடுத்த 2 நாட்களுக்கு தென்தமிழக கடல்பகுதி, மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதியில் சூறாவளிக் காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் கூடுதல் திரைப்படங்கள் தயாரிக்க வேண்டும் என்று திரைப்பட இயக்குநர்களை பிரபல ஹிந்தி நடிகர் திரு. அனுபம் கெர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவாவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் பேசிய அவர், திரைப்பட இயக்குநர்களும், தயாரிப்பாளர்களும் ஜம்மு-கஷ்மீரின் கலாச்சாரத்தையும், இயற்கை எழிலையும் திரைப்படங்களில் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன் மூலம் அப்பகுதியில் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன், வேலைவாய்ப்பும் உருவாகும் என்று திரு. அனுபம் கெர் கூறினார்.

<<<<>>>>

பருவநிலை மாற்றம் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உலக நாடுகள் ஒத்துழைக்க முடிவெடுத்துள்ளது.

பிரேசிலில் நடைபெற்ற ஐ.நா. பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் இதற்கான முடிவு எட்டப்பட்டுள்ளது.

பருவநிலை தொடர்பான வர்த்தக கட்டுப்பாடுகளை மாற்றியமைப்பது, இயற்கை பேரிடரை எதிர்கொள்ள வளரும் நாடுகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் கூடுதல் நிதியுதவி அளிப்பது உள்ளிட்டவை இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளது.

<<<<>>>>

ஆஸ்திரேலியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

சிட்னியில் இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் லக்ஷயா சென் - ஜப்பானின் - Yushi Tanaka-வை 21-15, 21-11 என்ற நேர் செட்களில் வென்றார்.

<<<<>>>>

குவஹாத்தியில் நடைபெறும் இந்தியாவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று தென்னாப்பிரிக்கா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 7 விக்கெட் இழப்புக்கு 392 ரன் எடுத்தது.

குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளையும், ரவீந்திர ஜடேஜா 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

<<<<>>>>

கொழும்புவில் நடைபெறும் பார்வை குறைபாடு உடையோருக்கான உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற 115 ரன் என்ற இலக்கை நேபாள அணி நிர்ணயித்துள்ளது.

முதலில் பேட் செய்த நேபாள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 114 ரன் எடுத்தது.

<<<<>>>>

நாகாலாந்தில் நடைபெறும் தேசிய ஜூனியர் மகளிர் கால்பந்து போட்டிகளில் இன்று ஹிமாச்சலப்பிரதேசம் - மத்தியப்பிரதேச அணியையும், மாகாராஷ்டிரா - மிசோரம் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>